The lamp should only be kept on a plate which is filled with one handful of ‘Akshadai’ (rice). The plate should be kept after a ‘Kolam’ is put. A brass plate is considered special or else based on convenience another plate can be used. It should not be kept on the top of a wooden plank. A banana leaf may also be used.

**சில சமயம் பூஜை அறையில் இரவு நேரத்தில் விளக்கு எறிந்து கொண்டிருந்தால் நாம் அதை எப்படி சாந்தப்படுத்தவேண்டும்? இதை பெண்கள் தான் செய்ய வேண்டுமா, அல்லது ஆண்களும் செய்யலாமா?**

பொதுவாய் பூஜை அறையில் விளக்கு ஏற்றி வைப்பது நல்லெண்ணெய் தீபமாக இருக்க வேண்டும். பிறகு அவரவர்கள் சௌகர்யப்படி ஏற்றி வைக்கவும். பூஜையின் போது விளக்கு எறிவதுதான் சிலக்கியம். பிறகு மாலை நேரத்தில் ஏற்றி வைக்க வேண்டும். இரவு படுக்க செல்லும் முன் விளக்கில் புஷ்பத்தை பாலால் நனைத்து வைத்துவிட்டு செல்ல வேண்டும். இரவு முழுக்க பூஜை அறையில் விளக்கு எரிந்து கொண்டு இருக்க அவசியம் இல்லை. விளக்கு எரிந்து கொண்டு இருந்தால் பல அசௌகர்யம் உண்டு.

மேலும் விளக்கு ஏற்றி வைத்து வருவது தொன்று தொட்டு காலம் காலமாக சாஸ்த்திர ரீதியாக பெண்கள் தான் பூஜையின் போது தீபம் ஏற்றி வைக்க வேண்டும். தவிர்க்க இயலாத சமயங்களில் ஆண்கள் பூஜை அறையில் தீபம் எற்றி வைக்கலாம், ஆனால் வீட்டில் விளக்கேற்றி வைப்பது பெண்களுக்கு உரிமை என்பதை விட சாஸ்த்திரத்தின் படி ஏற்பட்டதாகும். குத்து விளக்கு அல்லது காமாக்ஷி விளக்கு ஏற்றி வைப்பது சிறப்பு.

விளக்கை இரவு நேரம் முழுதும் பூஜை அறையில் எரியவிட வேண்டாம். புஷ்பத்தினால் அதை சாந்தப்படுத்த வேண்டும். ஸ்திரீகள் மேற்கூறிய இந்த கைங்கர்யத்தை செய்வது அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் மிக மிக முன்னேற்றத்தை கொடுக்கும். பொதுவாகவே காலை ஐந்து மணி முதல் இரவு எட்டு மணி வரை மட்டும் பூஜை அறையில் தீபம் எரியலாம். மேலும் சுமங்கலிகள் அதிகாலை எழுந்ததும் தீபம் ஏற்றி வைக்கலாம். சுமங்கலிகளுக்கு தோஷமில்லை. பிறகு காலை கடன்கள் (ஸ்நானங்களை) முடித்து கொண்டு பூஜை அறையில் ஸ்தோத்திரம் சொல்வது, பூஜை

போன்றவற்றை கடைபிடித்தல் வேண்டும். விளக்கை ஒரு தாம்பாளத்தில் ஒரு பிடி அக்ஷதை (அரிசி) பரப்பி அதன் மேல் தான் வைக்க வேண்டும். தாம்பாளத்தை கோலமிட்டு அதன் மேல் வைக்க வேண்டும். பித்தளை தாம்பாளம் விசேஷம், அல்லது சௌகர்யம் போல் வைத்துக்கொள்ளலாம். மரத்தின் மீது (பலகை) வைப்பது கூடாது. வாழை இலையை உபயோகிக்கலாம்.

**77. Why do we tie plantain trees at the main entrance of the venue of the function?**

In our house and in temples and for various other festivals and functions, great importance is given to both the plantain trees and mango leaves. In case of plantain trees, one tree grows into several as the baby leaves keep multiplying and growing into many plantain trees. This is tied in many houses and in the entrance of the house during functions. The plantain tree also denotes 'Vamsa Vriddhi' (Lineage Growth). Further it also offers itself or contributes itself for many things.

ஏன் வாழை மரத்தை விசேஷ நாட்களில் வாசலில் கட்டுகிறோம்?

நம் வீடுகளில் மட்டும் அல்லாது ஆலயங்கள், விழாக்கள், இன்னும் ஏராளமான விசேஷங்களில் வாழை தோரணம், மாவிலை இவ்விரண்டும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது வாழை என்பது ஒன்று பலவாக பெருகும்படியாக அடியிலிருந்து பல கன்றுகள் தோன்றி பல வாழை மரங்கள் தோன்றுகிறது. அதை வீட்டிலோ, பிற நல்ல காரியங்களிலோ வீட்டு வாசலில் கட்டப்படும். வாழை மரம் வம்ஸ விருத்திகாகவும் மேலும் அது பல வகையிலும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும்.

**78. I have seen some people using electric Kamakshi Vilakku as a replacement for the traditional oil lit lamps. Is this acceptable?**

The electric Kamakshi Vilakku should not be used in Poojas or in a Pooja room. The traditionally used Kamakshi Vilakku should be lit with the wick and oil as per the Shastras.

It can be kept in the house in other places for decoration purpose. But the electric Kamakshi Vilakku should not be used in the pooja room, sanctum sanctorum (Garbha griha) in a temple and in any place where pooja is being performed. During Navarathri some people use this electric lamp in their pooja room as a decoration and it may be for that occasion only. But this should not be followed daily as a routine. Even in few temples electric lamps are used, but this is not mentioned in the Shastras.

Generally the natural form i.e. the Kamakshi Vilakku which is made out of Pithalai or Panchaloka should be used. Using Gingelly oil or Ghee for lighting the lamp is the best. Panju thiri or Nool thiri can be used. Kamakshi Vilakku is nothing but the form of Goddess Kamakshi Herself. Since the lamp has the name of Kamakshi it is ideal for use during a pooja and it will also provide special benefits. In the pooja room or in the sanctum sanctorum of a temple, an electric lamp or electric Kamakshi Vilakku should not be used. If we visit old temples we can see the sanctum sanctorum with a lamp (i.e. lit with the wick and oil). We can also feel the sanctity in such temples. At present, since the God within the sanctum sanctorum cannot be seen by few people from a distance, electric lights are used. Because of certain situations, it may be required to use the electric light within the sanctum sanctorum in few temples. One obtains the satisfaction of getting the complete Darshan of God in such a manner. For the satisfaction and peace of people, such electric lamps are used. When we visit temples we should light a lamp and have the Darshan of God. By lighting a lamp our ignorance will be removed and following this as much as possible is good.

**சிலர் சாஸ்த்திரபடி எண்ணெய் ஊற்றி ஏத்தும் விளக்கிற்கு பதில் மின்சாரம் மூலம் எரியும் காமாக்ஷி விளக்கை பயன் படுத்துகிறார்கள். இது முறையா?**

**காமாக்ஷி விளக்கு எலக்ட்ரிக்கில் உபயோகப்படுத்துவது பூஜையில் அல்லது பூஜை அறையில் கூடாது. நம்முடைய பாரம்பரிய விளக்காக உபயோகப்படுத்தும் காமாக்ஷி விளக்கு எண்ணெய் திரி கொண்டு உபயோகப்படுத்துவது தான் சாஸ்த்திரம்.**

**வீட்டில் மற்ற இடங்களில் அழகுக்கு வைத்துக் கொள்ளலாம்.**

ஆனால் பூஜை அறை, ஆலயத்தில் கருவறை மற்றும் பூஜை செய்யுமிடத்தில் எலக்ட்ரிக் சம்பந்தமான காமாக்ஷி விளக்கு கூடாது. பூஜை அறையில் நவராத்ரி காலங்களில் சில பேர் மட்டும் அலங்காரத்திற்காக வைக்கிறார்கள். அது அந்த உத்ஸவத்தோடு சரி. ஆனால் அதை வழக்கத்தில் தினமும் கடைபிடிக்கக் கூடாது. ஒரு சில ஆலயங்களில் கூட இதை உபயோகிக்கிறார்கள். அது சாஸ்த்திரத்தில் கூறவில்லை. பொதுவாக இயற்கையான முறையில் அதாவது பித்தளையிலோ அல்லது பஞ்ச லோகத்திலோ காமாக்ஷி விளக்கு இருக்க வேண்டும். நல்லெண்ணை மற்றும் நெய் உபயோகிப்பது சிறப்பு. பஞ்சு திரி அல்லது நூல் திரி போன்றது உபயோகிக்கலாம்.

காமாக்ஷி விளக்கு என்பது சாக்ஷாத் காமாக்ஷியே, விளக்கு ரூபமாக இருக்கிறாள். காமாக்ஷி என்ற பெயருடன் விளக்கு விளங்குவதால் இது பூஜைக்கு ரொம்பவும் விசேஷமான பலனை தரக்கூடியது. பூஜை அறையில் அல்லது கோவில் கருவறையில் மின்சார விளக்கு அல்லது மின்சார சம்பந்தமான காமாக்ஷி விளக்கு கண்டிப்பாக கூடாது. பழங்கால ஆலயங்களைச் சென்று தரிசித்தோமானால் இப்பவும் கருவறையில் விளக்கு மட்டும் இருக்கும். அதாவது எண்ணெய் தீபம் தான். அம்மாதிரி ஆலயத்தில் சாந்நித்யமும் இருக்கிறது. தற்சமயத்தில் கருவறையிலிருக்கும் ஸ்வாமி தூரத்தில் இருந்து பார்க்கும் ஒரு சிலருக்கு தெரியாததினால் அங்கு எலக்ட்ரிக் லைட்டை உபயோகப்படுத்துகிறார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைதான் சில கோவில்களுக்கு கர்ப்ப கிரஹத்தில் மின்சார பல்புகளை உபயோகிக்க வேண்டியுள்ளது. பகவானை முழுமையாய் தரிசனம் செய்த திருப்தி கிடைக்கிறது. மனிதர்களின் மன நிறைவுக்கும் நிம்மதிக்கும் இம்மாதிரி எலக்ட்ரிக் விளக்குகள் உபயோகப் படுத்தப்படுகிறது. ஆலயங்கள் சென்று தரிசனம் செய்யும் போது நம் கையால் தீபம் ஏற்றி வைத்து ஸ்வாமியை தரிசனம் செய்து வரவேண்டும். விளக்கு ஏற்றி வைப்பது கூட நம்முடைய அக்ஞானம் விலகும். முடிந்தவரை கடைபிடிப்பது உத்தமம்.

**79. After sunset, if we want to do Namaskaram to elders which direction should we face and do Namaskaram?**

Sunrise and sunset – these should be considered in our custom for

Anushtanam only. Further when we do Namaskaram to elders or to a Guru, we should prostrate to them facing north. We should request elders to face east or west and then do Namaskaram facing north. During sunset if we face east and do Namaskaram also, it is not wrong. You can request them (elders) to stand in the west and then you can do Namaskaram facing east. Further, since God is not confined to one direction and is present in all directions, you can be on His right side and then do Namaskaram to God. Further in places like a temple or where a Guru resides, you should not prostrate to other people. Specifically Namaskaram should be done in a manner where the entire body touches the ground and this is considered superior. In few places (cities), bending and touching the feet and then keeping the hand on your chest (or) touching the feet and then touching your head is followed.

Hence when Namaskaram is done for elders or for God, it should be done in a manner where the entire body touches the ground. Further bending and touching the feet and then keeping your hand on your chest (or) touching the feet and then touching your head – this is also a custom or practice which is followed in certain families.

**சூர்ய அஸ்தமனத்திற்கு பின் பெரியவர்களுக்கு நமஸ்காரம் எந்த திசையை நோக்கி செய்ய வேண்டும்?**

**சூர்ய உதயம் மற்றும் அஸ்தமனம் இவற்றை நாம் வழக்கத்தில் அனுஷ்டானத்திற்கு மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் நமஸ்காரம் என்பது பெரியவர்களையோ குருவையோ செய்யும் போது வடக்கு முகமாக நமஸ்கரிக்க வேண்டும். பெரியவர்கள் கிழக்கு முகமாகவோ மேற்கு முகமாகவோ நிற்கச் சொல்லி வடக்கு பார்த்து நமஸ்கரிக்கலாம். அஸ்தமனத்தின் போது கிழக்கு நோக்கி நமஸ்கரித்தாலும் தவறில்லை. அவர்கள் (பெரியவர்கள்) மேற்கு நோக்கி நிற்கச் சொல்லவும் பிறகு கிழக்கு நோக்கி நமஸ்காரம் செய்யவும். மேலும் ஸ்வாமி கிழக்கு போன்ற திசைகளன்றி அனைத்து திசைகளிலும் வ்யாபித்திருப்பதால் பகவானுக்கு நமஸ்கரிக்கும் போது அவருக்கு வலது புறம் இருந்து நமஸ்காரம் செய்யவும். மேலும் கோவில் குருமார்கள் இவர்கள் இருக்குமிடத்தில் யாருக்கும் நமஸ்காரம் செய்யலாகாது. குறிப்பாக நமஸ்காரம் என்பது சாஷ்ட்டாங்கமாக பண்ணுவது சிறப்பு. குனிந்து காலை தொட்டு மார்பில் வைத்துக் கொள்வது, காலை தொட்டு தலையை தடவிக் கொள்வது**

என்று சில ஊர்களில் வழக்கத்திலுள்ளது. பொதுவாக நமஸ்காரம் பெரியவர்களுக்கு செய்தாலும் கடவுளுக்கு செய்தாலும் சாஷ்ட்டாங்கமாக பண்ண வேண்டும். மேலும் சற்று குனிந்து காலை தொட்டு ஹ்ருதயத்தில் வைத்து கொள்வது, தலையை தடவிக் கொள்வது என்பது கூட அவரவர்கள் குடும்ப வழக்கமாகிறது.

**80. On Grahanam (eclipse) days, till the eclipse gets over having food is generally avoided. During this period can we consume water / milk / porridge? What are the general do's and dont's?**

Generally there are two kinds of eclipse (Grahanam) i.e. Solar eclipse and Lunar eclipse. One should not eat anything during the time of eclipse. Further if we have taken any Japa Upadesha, chanting the same during the time of eclipse would provide Atma Shuddhi and good health. Even scientifically, the radioactive emissions caused at the time of eclipse can cause health issues as per the Shastra. If there is no food inside the physical body at that time, any kind of Dosha would not arise. During eclipse it is a practice to put Darba inside water and inside other items which would be used for preparing food. These kind of practices have been followed for many years now.

Further during the time of eclipse, if snanam is done after doing Maha Sankalpam for everyone, it would provide special benefits. On the day of eclipse for certain Nakshatrams (i.e. in whichever Nakshatram the eclipse has occurred), those people should definitely do snanam and give charity. Any one of these can be provided as charity - Gothumai, Nel and Ulundu (Black Ulundu). When one does snanam in the banks of a river and stands in that water, one will gain Mantra Siddhi. Further when the eclipse occurs during night time and one performs Pooja, Japam, Bhajan (Nama Sankeerthanam) etc. without sleeping at that time, benefits are certain. Snanam, Tarpanam, Pooja and Japam are necessary.

As per the Shastra, during eclipse time pregnant ladies should not go out. When the eclipse starts, one should do Snanam, Pooja, Japam and when the eclipse ends, one should do Snanam and also clean the house (i.e. should wash the floor with water) and this is required.

Only after this, can one cook and eat food. Those who do Tarpanam ('Pitru Poojanam') should do the same in between 'Madhya Kalam' and 'Moksha Kalam' (i.e. just before the eclipse ends).

**பொதுவாக க்ரஹண காலத்தில் எதுவும் சாப்பிட கூடாது என்பார்கள், ஆனால் நீர், பால் அல்லது கஞ்சி அருந்தலாமா? மேலும் இச்சமயங்கில் என்ன செய்யலாம் என்ன செய்யக்கூடாது என்பது பற்றி கூறுங்கள்.**

பொதுவாக க்ரஹணம் என்பது இரண்டு வகை, அதாவது சூரிய க்ரஹணம் மற்றும் சந்திர க்ரஹணம் ஆகும். க்ரஹண காலத்தில் எதுவும் சாப்பிடாமலிருக்க வேண்டும். மேலும் நாம் ஏதாவது ஜப உபதேசம் வாங்கியிருந்தால் க்ரஹண காலத்தில் ஜபித்தால் சரீரத்திற்கு ஆரோக்யமும் ஆத்ம ஸுத்தியும் ஏற்படும். விஞ்ஞான ரீதியாகவும் க்ரஹணங்கள் மூலம் ஏற்படும் கதிர்வீச்சு சரீரத்திற்கு சிரமத்தை ஏற்படுத்தலாம் என்பது சாஸ்த்திரம். சரீரத்தில் ஆஹாராதிகள் தங்காதிருந்தால் தோஷம் ஏற்படாது. தீர்த்தம் மற்றும் உணவு தயாரிக்க வைத்திருக்கும் பொருட்களில் தர்பையை போடுவது மரபு. பழங்காலம் முதற்கொண்டு இம்மாதிரி விஷயங்கள் அனுஷ்டிக்கப்படுகிறது.

மேலும் க்ரஹண காலத்தில் அனைவருக்கும் மஹா சங்கல்பம் செய்து கொண்டு ஸ்நானம் செய்வது மிக மிக விசேஷமான பலனைத் தரும். க்ரஹணதன்று சில நட்சத்திரங்கள் குறிப்பிட்ட நட்சத்திரங்கள் அதாவது யாருடைய நட்சத்திரதன்று க்ரஹணம் பிடிக்கிறதோ அவர்கள் ஸ்நானம் செய்து தானம் செய்ய வேண்டும். கோதுமை, நெல், உளுந்து (கருப்பு உளுந்து) இதில் ஏதாவது ஒன்றை தானம் செய்யலாம். நதிதீரத்தில் ஸ்நானம் செய்து ஜலத்தில் நின்று ஜபம் செய்வதால் மந்த்ரஸித்தி உண்டாகும். மேலும் க்ரஹணம் இரவு நேரத்தில் வரும் போது தூங்காமல் இருந்து பூஜை, ஜபம், பஜனை (நாம சங்கீர்த்தனம்) செய்தால் பலன் உண்டு. ஸ்நானம், தர்ப்பணம், பூஜை, ஜபங்கள் அவசியம் ஆகும்.

க்ரஹண நேரத்தில் கர்ப்பிணி ஸ்திரீகள் வெளியே செல்லக் கூடாது என்பது சாஸ்த்திரம். ஸ்பர்ஸம், உன்மீளனம், மோக்ஷம் என்பது க்ரஹண காலத்தில் அனுஷிக்கப்படுகிறது. க்ரஹணம் பிடிக்கும் போது ஸ்நானம், பூஜை, ஜபம் பிறகு விடும் போது ஸ்நானம், வீட்டை சுத்தப்படுத்துவது (தரையை தண்ணீரால்

சுத்தப்படுத்த வேண்டும்) அனைவரும் ஸ்நானம் செய்வது அவசியமாகும். பிறகு தான் சமைத்து சாப்பிட வேண்டும். தர்ப்பணம் (பித்ரு பூஜனம்) செய்பவர்கள் மத்ய காலத்திற்கும் மோக்ஷ காலத்திற்கும் மத்தியில் அதாவது க்ரஹணம் விடுவதற்கு முன் செய்ய வேண்டும்.

**81. Should Parishechanam be done only when rice is served (for food)? If there is pre-made food like Sambar rice, Lemon rice, Upma etc., should Parishechanam still be done?**

Chanting/Doing Parishechanam is important and essential. For all rice items Parishechanam should be done definitely. Whatever be the rice, whether it is tamarind rice or curd rice or lemon rice or sambar rice, for all those items prepared using rice, Parishechanam should be done and this is as per our Shastras. Parishechanam should be done only for those food items which are prepared using whole or full rice and not using the rice which is split/broken.

பரிசேஷனம் அன்னம் பரிமாறிய பின் தான் செய்ய வேண்டுமா? மேலும் கலந்த சாதமான சாம்பார் சாதம், எலுமிச்சை சாதம், உப்புமா போன்றவை பரிமாறினாலும் அதற்கு பரிசேஷனம் செய்ய வேண்டுமா?

பரிசேஷனம் என்று சொல்வது அவசியமானது. அன்னம் என்று சொல்லும் அனைத்துக்கும் பண்ணித்தான் ஆக வேண்டும். எந்த அன்னமோ அது புளியோதரையோ அல்லது மற்ற சாதங்களான தயிர்சாதம், எலுமிச்சம்பழம் சாதம், சாம்பார் சாதம் போன்ற அரிசி மூலம் செய்யும் அனைத்து பதார்த்தங்களுக்கும் பரிசேஷனம் அவசியம் செய்வது நமது சாஸ்த்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அரிசி பின்னமில்லாது முழு அரிசி மூலம் பண்ணும் ஆகாரத்திற்கு மட்டும் பரிசேஷனம் உண்டு.

**82.What does Namaskaram symbolize? How should one do Namaskaram?**

Namaskaram makes us humble. It is important to understand to whom we are doing Namaskaram. As the saying goes “Vidhwan Sarvathra Poojyathe” – We need not know whether the person to

whom we are doing Namaskaram is knowledgeable (or) has wisdom. Namaskaram is also called as ‘Saranagathi Bhakthi’. However, for the elder people we can do Namaskaram in the normal way. Namaskaram is given great importance not only in Hindu religion, but also in other religions. There are 4 ways of doing Namaskaram:

- To a mother - Doing namaskaram with folded hands, held in a position above our stomach.
- To a father - Doing namaskaram with folded hands, held in a position above our chest.
- To Guru - Doing namaskaram with folded hands, held in a position above our mouth.
- To God - Doing namaskaram with folded hands, held in a position above our head.

For ladies, ‘Panja-anga’ Namaskaram is prescribed - Foot (padam), knee (muzhangal), elbow (muzhangai), hand nail (nagam), head (Sirasu).

For gents, ‘Shashta-anga’ Namaskaram is prescribed - Lying down, with the hands placed above our head (in such a manner that hands are raised to a highest position). As the saying goes ‘En Saan Udambukku Sirase Pradhaanam’ – Surrendering the great Head (on behalf of the entire body) to the Padam.

**நமஸ்காரம் என்பதை நாம் எதற்காக செய்கிறோம்? நமஸ்காரத்தை செய்ய சரியான முறை என்ன?**

நமஸ்காரம் நம்மை பணியச் செய்கிறது. யாருக்கு செய்கிறோம் என்பது மிகவும் அவசியம். சரணாகதி பக்தி என்பது தான் நமஸ்காரம். மேலும் பெரியோர்கள், அருளாளர்கள் இவர்களுக்குண்டான நமஸ்காரம் பொது விதி. இந்து தர்மம் மட்டும் அல்ல பல மதங்களும் நமஸ்காரத்தை பெருமையாக பேசுகிறது.

நமஸ்காரம் 4 வகை முக்கியம். தாயை வயிற்றுக்கு நேராக கைகூப்பியும், தகப்பனாருக்கு திருமார்புக்கு நேராகவும், குருவுக்கு வாய்க்கு நேராக கைகூப்பியும், கடவுளுக்கு தலைக்கு மேல் கைகூப்பியும் வணங்க வேண்டும்.

பெண்களுக்கு பாதம், முழங்கால், முழங்கை, கை, சிரசு - பஞ்சாங்க நமஸ்காரம்.

ஆண்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யனும் படுத்து கையை உயர்த்திய நிலையில் நமஸ்கரிக்க வேண்டும். என் சாண் உடம்புக்கு சிரஸே பிராதாணம். அப்பேர்பட்ட தலையை பாதத்தில் ஸமர்பிப்பது சரணாகதி தத்துவம்.

**83. Saivite followers apply holy ash on forehead with three fingers. What is the significance of this number 3?**

“Mandiramavadu Niru”; “Vanavar Meladu Niru”; “Sundiramavadu Niru”; “Tudikapaduvadu Niru”; Holy ash is also explained in the Vedas – Ash has such great significance. Ash signifies ‘Aishwaryam’. The significance of Ash is also explained in Devaram.

To destroy the 3 qualities of “Aanavam”, “Kanmam” and “Maya”, the three lines are used. Further it is applied using three fingers. The top line denotes Birth, the middle line denotes Life and the third line denotes Death. In the middle line, we apply Chandanam and Kumkum – and this is to lead a proper life.

**சைவத்தை பின்பற்றுபவர்கள் விபூதியை மூன்று கோடுகளாக நெற்றியில் ஏன் தரித்துகொள்கிறார்கள்?**

மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு, சுந்திரமாவது நீறு, துதிக்கப்படுவது நீறு, வேதத்தில் உள்ளது நீறு, என்பதைப் போல் திருநீற்றுக்கு அவ்வளவு பெருமை உண்டு. விபூதியே ஐஸ்வர்யம், தேவாரத்தில் கூட திருநீற்றின் பெருமை உணர்த்தப்படுகிறது. 'நீரில்லா நெற்றி பாழ் நெய்யில்லா உண்டி' இது முதுமொழி, ஆணவம், கன்மம், மாயை மும்மலங்களை அழிக்க 3 கோடு. மேலும் 3 விரல்களினால் இட்டுக்கொள்கிறோம். மேல் கோடு பிறப்பு, நடுக்கோடு வாழ்க்கை, கீழ்கோடு இறப்பு. நடுக்கோட்டில் சந்தனம் குங்குமம் இடுவோம் வாழ்க்கை செம்மையாக இருக்க வேண்டி.

**84. What is the criteria followed to classify a Siva Bhaktha as a ‘Nayanmar’? Why are Adi Sankara, Ramana Maharishi, Maha Periyava also not called as Nayanmars?**

In Saivism there are 63 Nayanmars and in Vaishnavism there are 12 Alwars. There are four Saiva Nayanmars called as Samaya Kuravar. Adisankara who existed 2500 years had established the six-fold system of worship (Shanmatha sthapana). Acharyas, who came in this lineage, followed the Sanyasa Dharma. Further Nayanmars obtained the grace of God through Bhakthi Margam only. There were also some Nayanmars who were beyond religion, caste, language, etc. and who following Grihastha-ashrama dharma and performed service to Lord Shiva.

Apart from the 63 Nayanmars, there are several people who have great devotion. Nayanmars realized God through their service. The Acharyas who came after them guided people on the right path and were involved in service to mankind. “Makkal Sevai Madhava Sevai” – people having the thought as per this saying can be considered as Nayanmars and there is nothing wrong in that. Those, who perform service without a selfish motive, follow the path of truth, do not engage in any publicity and have the quality of sacrifice - can all be considered as Nayanmars. Hundreds of years before those who performed great service in Saivism were considered as Nayanmars.

**எல்லா சிவ பக்தர்களும் நாயன்மார்களா? ஏனெனில் ஆதி சங்கரர், ரமண மஹரிஷி, மஹா பெரியவா இவர்களை நாம் பொதுவாக நாயன்மார்களாக கருதுவதில்லை. நாயன்மார்களாக கருதுவதற்கு காரணம் என்ன?**

சைவத்தில் 63 நாயன்மார்கள் உண்டு. வைணவத்தில் பன்னிரு ஆழ்வார்கள் உண்டு. சமயகுரவர்கள் 4 (நால்வர்) என்று உண்டு. 2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஆதிசங்கரர் ஷன் மதங்களை ஸ்தாபனம் செய்தார். அவ்வழியில் வந்தவர்கள் ஆச்சாரியர்கள், ஸன்யாச தர்மத்துடன் வாழ்ந்து வந்தனர். மேலும் நாயன்மார்கள் பக்தி மூலமாக மட்டும் இறைவனின் திருவிளையாடலுக்கு உட்பட்டனர். ஜாதி, மதம், இனம், மொழி அனைத்தையும் கடந்து க்ருஹஸ்தாஸ்ரம தர்மத்திலிருந்து கொண்டு சில நாயனமார்கள் சிவ தொண்டு ஆற்றினர். 63 நாயன்மார்களுக்கு பிறகு எத்தனையோ பேர் பக்தியில் உயர்ந்து இருக்கின்றனர். நாயன்மார்கள் தன்னுடைய தொண்டினால் இறைவனை கண்டனர். பிறகுள்ள பல ஆச்சார்ய புருஷர்கள் சமுதாய பணியும் போதனையும் செய்து மக்களை நல் வழிப்படுத்துகின்றனர். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று நாயன்மார்களாக பலரையும் வழிபடலாம்.

தவறில்லை. எந்த மனிதன் சுயநலமின்றி உண்மையாக விளம்பரம் இன்றி, தியாகப்பண்புடன் தொண்டாற்றி வருகிறார்களோ அவர்கள் எல்லாம் நாயன்மார்கள் தான். பல நூற்றாண்டுகளுக்கு முன் சைவத்தில் சிறந்து தொண்டாற்றியவர்கள் நாயன்மார்கள்.

**85. I am a vegetarian and support pure vegetarianism. However, if a non-vegetarian counters me that God Himself eats meat, how do I explain this?**

In case of food, we should follow what has been followed over ages and over many generations. God has created all living beings and exists in all living beings. Further Lord Rama, who was living in the forest, would have had that food, which was available in the forest. Also Sabari used to keep fruits everyday for Lord Rama. For man to be of Sathwic nature, vegetarian food was prescribed. In any situation, we should never compare Avatars with us. There are certain things which are dictated for man. 'Eating non-vegetarian food is good or bad? Can we have non-vegetarian food or not?' – these doubts are acceptable. Food and habits are laid down as per Varnashrama Dharma. It is considered superior when everyone adopts the good things in Bhakthi Marga. Food and its habits are based on what has been practiced in each one's Kula. 'Eating non-vegetarian food is good or bad?' – the question itself has the answer. If we have a feeling that something is wrong, only then would we would have a doubt on whether it is right or wrong. 'Eating non-vegetarian food is wrong' is My personal opinion. The state of God and man are different from each other. Even Lord Rama took Avatar as a human.

**நான் சைவ உணவை மட்டும் தான் சாப்பிடுகிறேன், ஆனால் அசைவம் சாப்பிடும் நபர் என்னை "கடவுளே அசைவம் சாப்பிடுகிறார்" என்று கூறினால் அதற்கு நான் என்ன கூறுவது?**

ஆகார நியமங்கள் வாழையடி வாழையாக கடைபிடித்திருப்பதை தான் நாமும் கடைபிடிக்கிறோம். எல்லா உயிரினங்களையும் படைத்து அத்தனை உயிரினங்களிலும் கடவுள் நிறைந்திருகிறார். மேலும் ராமர் காட்டில் இருக்கும் போது வனவாஸத்தில் அங்கு கிடைக்கும் பொருளை தான் சாப்பிட்டிருப்பார். இருப்பினும் சபரி தினமும் பழங்களை ராமனுக்காக எடுத்து வைத்து பக்தி பண்ணினார். கண்ணப்ப நாயனார் பக்தி கூட நமக்கு புலப்படுகிறது.

மனிதனின் சாத்வீகமான குணங்களின் அடிப்படைக்காக சைவ உணவு அமைந்திருக்கிறது. நாம் எந்த ஒரு விஷயத்தையும் அவதார புருஷர்களுடன் நம்மை ஒப்பிட்டு பார்க்க கூடாது. மனிதன் என்று எடுத்துக்கொண்டால் அவனுக்கு ஒரு சில விஷயங்கள் விதிக்கப்பட்டிருக்கிறது. மாமிசம் சாப்பிடுவதால் நன்மையா, தீமையா, மாமிசம் சாப்பிடலாமா வேண்டாமா என்ற சந்தேகங்கள் சரியானது தான். வர்ணாஷ்ரம தர்ம அடிப்படையில் தான் ஆகாரங்களும், நியமங்களும் அமைந்திருக்கிறது. பக்தி மார்கத்திலுள்ள நல்ல விஷயங்களை அனைவரும் கடைப்பிடிப்பது சிறப்பு. நம் குல வழக்கத்தின்படி தான் ஆகார நியமங்களும். அசைவம் சாப்பிடுவது தவறா என்ற கேள்வியிலேயே பதிலும் உள்ளது. ஒரு விஷயம் நம் மனத்திற்கு தவறாக தோன்றினால் தான் அது தவறா சரியா என்ற சந்தேகம் வரும். அசைவம் சாப்பிடுவது தவறு என்பதும் என்னுடைய தனிப்பட்ட கருத்து தான். கடவுள் மனிதன் என்ற நிலை வேறு வேறு. ராமர் கூட மனிதனாக அவதாரம் எடுத்தார்.

**86. Does Rudraksha have healing power and how can I know its genuineness? Does it always have to be worn around the neck or can it be carried in the hand?**

Rudraksha is Parameshwara Swaroopa. When you wear the Rudraksha it is good for the mind and body. The genuineness of the Rudraksha has to be checked before buying it. Rudraksha is also an essential ornament which should be worn. It is considered superior when the Rudraksha is accepted from a Guru or from a person (elderly person) who is knowledgeable and experienced with Rudraksha. When we plan to purchase a Rudraksha, we should take our Guru or a person who is knowledgeable about Rudraksha, along with us and then purchase it. People say ‘Oru Mugham’, ‘Eindu Mugham’, etc. What ever be the number of Mugham, the effect of it is the same. Rudraksha itself has great significance and value. Genuine Rudraksha can also be obtained from a Guru. It can be obtained as a Prasadam, rather than purchasing it with money. Obtaining it as a prasadam is considered superior. When the Rudraksha has to be worn, formalities become important for that. Wearing Rudraksha is considered superior. We should respect the Rudraksha for its value. Rudraksha can be worn by all. There is nothing wrong. Wearing Rudraksha in the neck is considered as Dharma. It should not be carried in the hand. There are no differences when it comes to wearing the Rudraksha. All can wear

the Rudraksha.

**ருத்ராக்ஷத்தின் மகிமை என்ன? அதை எப்பொழுதும் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டுமா, அல்லது அதை நாம் கையில் எடுத்து செல்லலாமா?**

ருத்ராஷம் சாக்ஷாத் பரமேஸ்வர ஸ்வரூபமே. அதை அணிந்து கொள்வது உடலுக்கும் மனதுக்கும் நன்மையை தருகிறது. நல்ல ருத்ராக்ஷங்களாக பார்த்து தான் வாங்க வேண்டும். ருத்ராக்ஷம் அவசியம் போட்டுக்கொள்ள வேண்டிய ஆபரணம் கூட. குருமூலமாகவோ, அல்லது ருத்ராக்ஷத்தைப் பற்றி நன்கு கற்றுணர்ந்துள்ள பெரியோர்களிடமோ அதை ஏற்றுக் கொள்வது சிறப்பு. நாம் பார்த்து வாங்கும் போது குருமார்களையோ, அல்லது அதைப்பற்றி உணர்ந்தவர்களையோ அழைத்து சென்று வாங்குவது தான் சிறப்பு. ஒரு முகம், ஐந்து முகம் என்றெல்லாம் சொல்கிறார்கள். எத்தனை முகமாக இருந்தாலும் பலன் ஒன்று தான். ருத்ராக்ஷம் என்றாலே அது மகத்துவம் தான். அதில் ஏற்றத்தாழ்வு இல்லை. நல்ல ருத்ராக்ஷம் மஹான்களிடமிருந்தும் பெறலாம். பிரஸாதமாக பெறலாம். விலைக்கு வாங்குவதை விட. பிரஸாதமாக அடைவதே சிறப்பு. ருத்ராக்ஷம் தரித்துக்கொண்டால் நியமங்கள் அவசியமாகிறது. ருத்ராக்ஷம் போட்டுக்கொள்வது சிறப்பு. ருத்ராக்ஷத்திற்குண்டான மதிப்பையும் நாம் தர வேண்டும். ருத்ராக்ஷம் அனைவரும் தரித்துக்கொள்ளலாம் தவறில்லை. ருத்ராக்ஷம் என்பது கழுத்தில் போட்டுக்கொள்வது தான் தர்மம். கையில் எடுத்துச் செல்லும்படியாக இருக்கக் கூடாது. ருத்ராக்ஷம் அணிவதில் கூட பாகுபாடு இல்லை. அனைவரும் அணியலாம்.

**87. What are the basics and benefits of simple meditation in the current fast-paced life like the best place to meditate, length of time, how to concentrate, what we can chant, etc.**

There is no ‘Avasara’ (Rush) Yuga, but there is the quality of being hasty. Wherever we are, if we think that God is inside us and meditate for sometime, that is also meditation. There is no simple way for meditation. Even if you meditate for a moment, you will receive all the benefits. The best place for meditation is the temple or our pooja room. Morning time is suitable. As we keep meditating, over a period of time, our mind would be in control. Further silence is also considered as meditation. For meditation, chanting any God’s

mantra is good. To meditate, it is not the place, time, period or mantra which is important, but it is the mind and the involvement which is most important and critical. The others aspects would automatically fall in place. Even the simplest way, would require you to chant God's name (within you) and meditate for a minimum of 10 minutes. This is My personal experience and opinion also.

**தியானத்தின் முக்கியத்துவம் என்ன? இந்த அவசர யுகத்தில் தியானம் எவ்வளவு மணி நேரம் செய்ய வேண்டும்? அதற்கு உகந்த இடம் எது மற்றும் அதை எப்படி செய்ய வேண்டும்?**

அவசர யுகம் என்று கிடையாது. அவசர குணம் உண்டு. நாம் எங்கிருந்தாலும் நம்முள் பகவான் இருப்பதாக பாவித்து தியானிப்பது கூட தியானம் தான். தியானத்திற்க்கு எளிமை கிடையாது. ஒரு க்ஷண நேரம் தியானம் செய்தாலும் நமக்கு பலன் பூரணம் தான். தியானம் செய்ய சிறந்த இடம் கோவில் மற்றும் நம் பூஜை அறை. அதிகாலை நேரம் உகந்தது. தியானம் செய்ய செய்ய ஒரு காலகட்டத்தில் மனம் ஒடுங்கும். மேலும் மௌனமும் தியானம் தான். மந்திரம் ஏதாவது ஒரு தெய்வத்தின் மந்திரமே த்யானத்திற்கு உகந்தது. தியானம் செய்ய இடமோ, நேரமோ, காலமோ, மந்திரமோ முக்கியமல்ல. மனமும் ஈடுபாடும் தான் அவசியம். மற்றவை தானாக அமையும். எளிய முறையில் தியானம் என்பது கூட குறைந்தது 10 நிமிடம் மனதுக்குள் இறைவனின் நாமத்தை சொல்வது கூட தியானம் தான். இது என்னுடைய தனிப்பட்ட அனுபவம் மற்றும் கருத்தாகும்.

**88.What is the difference between religion and spirituality?**

Religion and spirituality are different. Faith in God, Bhakthi Yoga, Joint Prayers and Dharma - these concepts are explained in religion as well as by Religious Gurus. One can travel the spiritual path, through religion. Religion has many good concepts. The tenets in religion are part of spirituality. In a man's life, most of the Dharma are mentioned. To make the Atma pure and to have peace of mind, spirituality is important and essential. Spirituality is there in all religions. When we adhere to the concepts in religion and follow the right path, that itself is considered as the greatest spirituality. Keeping Shastras and Sampradaayam in mind, we cannot realize God. Through love, through good character and by helping people we can realize God. Through Meditation or Yoga, one's mind can

become clear and by this, one can experience God. Siva Sankar Baba has said “I have realized God and have become God; even you can become God. A human like you should also become God”. We should realize that God is inside us. He has also mentioned that if someone wants to become God, they should be prepared to sacrifice. To realize God outwardly, one should have (develop) the eligibility. Sambradayam is there in spirituality also. All good concepts are in spirituality. You have mentioned that there are several ways to attain Moksha. In all the ways for attaining Moksha (i.e. understanding spirituality, acting according to spirituality and realizing yourself), if you choose to adopt any one way and follow that with total faith, you are sure to attain Moksha. Infact if you adopt any one of these ways and follow that with total faith, at some point in time you will attain Moksha. In general, if anyone upholds the Dharma which is laid down for them, they are sure to realize the path for Moksha.

**மதத்திற்க்கும் ஆன்மீகத்திற்க்கும் வித்தியாசம் என்ன?**

ஆன்மீகம் அவசியமானது. ஆன்மீகம் சார்ந்த மதங்கள் தான் அனைத்து மதங்களும். மதங்களின் போதனைகளை பின்பற்றி நல்ல வழியில் நடப்பதே சிறந்த ஆன்மீகம். சாஸ்திர ஸம்ப்ரதாயங்களை கொண்டு கடவுளை உணரமுடியாது. அன்பின் மூலம், ஒழுக்கத்தின் மூலம், பரோபகாரத்தின் மூலம் கடவுளை உணர முடியும். தியானம், யோகா மூலம் மனம் தெளிவடையும். அதன மூலம் இறை உணர்வை அடைய முடியும். சிவசங்கர் பாபா அவர்கள் கூட நான் கடவுளை உணர்ந்து கடவுளாகிவிட்டேன், நீயும் கடவுளாகலாம். மனிதனாக இருக்கும் நீ கடவுளாக ஆக வேண்டும் என்று கூறுகிறார். நம்முள் கடவுள் இருக்கறார் என்பதை உணரவேண்டும். அவர் கடவுளாக ஒருவன் ஆகவேண்டுமானால் அவன் தியானம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்கிறாரர். கடவுளை வெளிப்படையாக உணர தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஸம்ப்ரதாயங்கள் ஆன்மீகத்திலுண்டு. நல்ல விஷயங்கள் அனைத்தும் ஆன்மீகமே. மோக்ஷத்தை அடைய அனைத்து வழிகளும் உண்டு, அதாவது ஆன்மீகத்தை அறிந்து கொள்வது, அதன் படி நடப்பது, நம்மை உணர்வது. இதில் ஒன்றை கொண்டு நம்பிக்கையுடன் இருந்தால் மோக்ஷகதி கிட்டும். ஏதாவது ஒரு வழியை பிடித்துக்கொண்டு முழு நம்பிக்கையுடன் சென்றால் ஒரு கால கட்டத்தில் மோக்ஷம் உண்டு. பொதுவாக யாராக இருந்தாலும் அவரவர்களுக்கு விதிக்கப்படட தர்மத்தை

கடைபிடித்தால் மோக்ஷத்திற்குண்டான வழி கிடைக்கும், வழி தெரியும்.

**89. How do we overcome Dhrishti?**

There are many kinds of Dhrishti. Every Dhrishti has a different effect. God's Dhrishti, Guru's Dhrishti, Children's Dhrishti, Elders' Dhrishti – these kinds of Dhrishti do not have a bad effect. Certain kinds of Dhrishti, especially the Dhrishti of people who are jealous, would affect us. By reading slokas, hearing good things, worshipping God, performing Pooja, doing some charity, etc. we can ensure that Dhrishti would not affect us anytime. In your entire life, at any point in time, it will not affect you. 'Dhrishti', 'Soonyam', 'Seivinai', 'Billi Soonyam', 'Mandrigam' - instead of believing in all these, one can have total belief in God and act according to that. When we think good, do good, pursue good things and have the grace of God, Dhrishti would not affect us. When we understand the saying "Avan Indri Oru Anuvum Asai-aadhu" and ignore Dhrishti, we would become a form of God. As per the saying "Dharmo Rakshati Rakshitaha", we would be protected by Dharma. When we do anything with total faith, we are sure to gain the benefit for it. If we need to surrender to a Sath Guru, the only way is by listening to the Upadesha of Kanchi Maha Periyava.

**திருஷ்டியை போக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

த்ருஷ்டி பலவகை உண்டு. எல்லா த்ருஷ்டிக்கும் வேறு வேறு பலன். பகவத் த்ருஷ்டி, குரு த்ருஷ்டி, குழந்தைகளின் த்ருஷ்டி, பெரியோர்களின் த்ருஷ்டி, இதனால் நமக்கு கேடு பலன்கள் இல்லை. ஒரு சில த்ருஷ்டிகள் குறிப்பாக பொறாமை குணம் கொண்டவர்களின் கண் த்ருஷ்டி மட்டும் தான் பாதிப்பை ஏற்படுத்தும். அதற்கு ஸ்லோகங்களை படிப்பதும், கதை ஸ்ரவணம் பண்ணுவதும், கடவுளை தரிசிப்பதும், பூஜைகளை செய்வதும், தான தர்மங்கள் சிறிது செய்தும், த்ருஷ்டியை எப்போதும் அண்டவிடாமல் விரட்டலாம். காலம் முழுதும் எக்காலத்திலும் கண்டிப்பாய் பாதிக்காது. த்ருஷ்டி, சூனியம், செய்வினை, பில்லி சூனியம், மாந்த்ரீகம் இதை நம்புவதைவிட இறைவனை மனப்பூர்வமாக ஏற்று நம்பிக்கையுடன் செயல்பட்டால் போதும்.

நாம் எப்போதும் நல்லதையே நினைத்து நல்லதையே செய்து, நல்லதையே சார்ந்து வாழும்போதும் பகவானின் க்ருபை மட்டும்

பூரணமாக இருப்பின் த்ருஷ்டி ஒன்றும் செய்யாது. அவன் அன்றி ஒரு அனுவும் அசையாது என்பதை புரிந்து கொண்டு த்ருஷ்டி போன்ற விஷயங்களை தவிர்த்தாலே நாம் பகவத் ஸ்வரூபமாக ஆகிவிடுவோம். 'தர்மோ ரக்ஷதி ரக்ஷித:' என்பது போல் தர்மத்தினால் நாம் காப்பாற்றப் படுகிறோம். நாம் எதை செய்தாலும் முழு நம்பிக்கையுடன் செய்தால் பலன் உண்டு. சத்குருவை சரணடைய ஒரே வழி காஞ்சி மஹா பெரியவாளின் உபதேசமே போதுமானது.

**90. What is the importance of a mother in a man's life? Does a mother lose her importance after a man is married?**

'Mathru Devo Bava - Revere your mother as God' - this is as per the Upanishads. 'Thayai Sirandhoru Kovilum Ellai'; 'Maathavai Oru Naalum Maraka Vendaam'; 'Annaiyum Pithavum Munneri Deivam' - there are many such proverbs which are part of our system. A mother need not introduce herself. She is the one, who shows you everything in this universe, including your father. There can be nothing in the whole world which is more important than your mother. We also say 'Mathru Bhoomi' or 'Thai Naadu'. We can also say that she is a sculptor who creates us. It is only because of a mother, that every Jeevatma can realize the Paramaathma. All mothers are a form of Para Devatha. One, who completely sacrifices herself, performs her duties without expecting anything in return, foregoes everything beyond food and sleep and who has the quality of 'sacrifice' in her at all times, is a Mother. It is believed that, even Adi Sankara who realized the time of death of His mother, came directly and performed all the Samskaaras. For a man, whether it is before or after marriage, a mother is required. The love and respect shown towards a mother should always be adhered by us.

A Mother signifies the entire 'Universe', for every one of us. She being Superior to God is the Truth.

**ஒரு மனிதனின் வாழ்வில் தாய் எவ்வளவு முக்கியம்? திருமணம் ஆன பிறகு அந்த தாயின் முக்கியத்துவம் குறைகிறதா?**

'மாத்ரூ தேவோ பவ', தாயை வணங்கு என்ற உபநிஷத்தும், தாயிற் சிறந்தொரு கோவிலும் இல்லை, மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், போன்ற பல முதுமொழிகள் வழக்கத்திலுள்ளது. தாய் தன்னை அறிமுகப்படுத்த வேண்டாம். தகப்பன் முதற்கொண்டு ப்ரபஞ்சத்தில் அனைத்தையும்

காண்பித்து தருகிறாள். தாயை விட உலகில் முக்கியமானதென்று யாருக்கும் இருக்க முடியாது. மாத்ரு பூமி, தாய்நாடு என்று கூட சொல்கிறோம். நம்மை உருவாக்கும் சிற்பி என்றும் ஜீவனுக்கு ஜீவனாயிருப்பவள் என்றும் ஒவ்வொரு ஜீவாத்மாக்களும் தாயால் தான் பரமாத்மா நிலையை அடைய முடியும். சாக்ஷாத் பரதேவதையே தான் அனைத்து தாயார்களும். தன்னை முழுமையாக தியாகம் பண்ணக்கூடியவள். ப்ரதிபலனின்றி செயலாற்றும் தன்மையும் உணவு, உறக்கம் பாராது தியாக மனப்பான்மையோடு இருப்பவள் தாய். ஆதி சங்கரர் கூட தாயின் அந்திம காலத்தை அறிந்து நேரடியாக வந்து ஸம்ஸ்காரங்கள் செய்ததாக ஐதீகம். ஒரு ஆணின் திருமணம் முன் திருமணத்திற்கு பின் எப்போதும் தாய் அவசியம். தாயிடம் உண்டான பரிவு, மரியாதை, அன்பு இதை நாம் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும். தாய் என்பவள் ஒவ்வொருவருக்கும் ஒரு ப்ரபஞ்சமே. இறைவனை விடவும் மேலானவள் என்பது உண்மை.

**91. What is the significance of lighting a lamp?**

When you light the lamp (Vilakku), ignorance will go away. There are sayings like - “Deepa-mangala Jyothi Namo Namah” by Arunagirinathar; “Aadiyum Andamum Ella Arut-perun-jyothi”, etc. Before commencing any auspicious activity, lighting a lamp and particularly performing Thiru Vilakku Pooja in this Kali Yuga would give immediate benefits. Even for worshipping (seeing) God in the sanctorium of the temple, light is essential. The lamp is the one which is used to explain the ‘Paramporul’ i.e. Supreme Being or Paramatma. Even if there are many mugams, when you light and worship it with one mugam, it is easier to control your mind and bring it to a single state.

**விளக்கு ஏற்றுவதின் முக்கியத்துவம் என்ன?**

விளக்கு ஏற்றுவது என்பது அக்ஞானத்தை போக்கிக் கொள்ளவும் அருவமே உருவாமாகி அநாதியாய் நின்ற பரம் பொருள் உருவமற்ற நிலை ஜோதி ஸ்வரூபமே. அருணகிரியார். தீபமங்கல ஜோதி நமோ நமஹ என்றும் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி என்றும், அடிமுடிகானா அண்ணாமலையார் ஜோதி ஸ்வரூபமாக நின்றதாக வரலாறு, அனைத்து சுபகார்யங்களுக்கும் தொடங்கும் முன் தீபம் ஏற்றுவது குறிப்பாக திருவிளக்கு பூஜை என்பது

கலியுகத்தில் கைமேல் பலன் தரக்கூடியது ஆகும். ஆண்டவனை தரிசிக்கக்கூட தீப ஒளி தான் கருவறையில் உபயோகமாயிருக்கிறது பரம் பொருளை விளக்குவதும், தீபம் பல முகத்துடன் இருப்பினும் ஒரு முகமாக வைத்து வழிபடும் போது மனம் ஒரு நிலைப்படுவது சுலபம்.

**92. When can one pluck Tulasi leaves?**

Among the leaves, 'Tulasi' and 'Vilvam' have special significance. Especially for 'Tulasi', there are many procedures prescribed. One should not pluck Tulasi on Tuesday, Friday, Ekadasi and the first day of the Tamil month. In case of any compulsion or urgency, one should take bath, chant the Gayathri and then pluck the 'Tulasi'. Later, one should offer prayers and worship the Tulasi and doing it in such a manner is considered as Dharma. As far as possible one should not pluck the 'Tulasi' which is being worshipped (i.e. for which pooja is performed) and this is considered noble. It is good to read the 'Tulasi Mahathmyam'.

**துளசியை நாம் எப்பொழுது பறிக்கலாம்?**

பத்ரங்களில் துளஸி, மற்றும் வில்வம் இரண்டும் மிக விசேஷமானவை. குறிப்பாக துளஸிக்கு மட்டும் அனேக விதிகள் உள்ளது. செவ்வாய், வெள்ளி, ஏகாதஸி மற்றும் தமிழ் மாதபிறப்பு இந்த தருணத்தில் பறிக்க கூடாது. பறிக்க வேண்டிய நிர்பந்தம் இருப்பின் ஸ்நானம் செய்து ஶுத்தமாக இருந்து மஹோந்நதமான காயத்ரியை ஜபித்து விட்டு பறிப்பதும், பிறகு ப்ரார்த்தித்து நமஸ்கரிப்பதும் தர்மமே. கூடியமானவறை பூஜையிலிருக்கும் துளஸியை எப்போதுமே பறிக்காமலிருப்பது உத்தமம். துளஸி மஹாத்மியம் வாங்கி படிப்பது உத்தமம்.

**93. What is the significance of mixing Vibuthi with water and then applying it?**

"Vibuthir Vipula-aishwaryam" - Vibuthi denotes Aishwaryam (prosperity or wealth). As per the Shastras, Vibuthi should be applied always and particularly it should be mixed with water and then applied. The Vibuthi which is prepared out of cow dung has special significance. There is a saying "Gho Rakshanam Loka Rakshanam" which means that protecting cows is considered equal to protecting

the universe. Further Vibuthi acquires a "pure" state through water. Vibuthi is also pure and it is actually the form of Goddess Maha Lakshmi. Water is the form of Ganges. Since these two are together, I refer this as Aishwaryam. From the cow's back side, near the tail portion, we get the cow dung (i.e. Pasum Saanam) which is Goddess Lakshmi and next we get the cow urine (i.e. Gho Moothram) which is the form of water. When we mix the Vibuthi with Gho Moothram (which is the form of the Ganges) or mix it with the water (where Ganges resides) in our house and then apply it, it is considered as Dharma. This is applicable during all and any 'Kaalam' (time period). Starting before sun rise and until before sunset, applying Vibuthi along with water is considered as Dharma. It is said that one should not bathe in the river after sunset and performing Gho Pooja after sunset would not provide any benefits. Chanting the mantra prescribed for Vibuthi while applying the Vibuthi would provide highly significant benefits. Like the saying "Kaanamal Konamal Kandu Kondu", before sunrise, between 5 to 6 in the morning, between 11 to 12 in the afternoon and between 5 to 6 in the evening, one should apply Vibuthi after mixing it with water. This is also part of our Anushtana Dharma. Applying the Vibuthi after mixing it well with water is part of our culture. Following our culture (Dharma) is important and necessary.

**விபூதியை தண்ணீரில் குழைத்து ஏன் தரித்து கொள்ள வேண்டும்? அதன் மஹிமை என்ன?**

'விபூதிர் விபுலமைஸ்வர்யம்' விபூதி ஐஸ்வர்யமாகும். திருநீற்று பதிகத்தில் பலவாராக விபூதியை கொண்டாடுகிறார்கள். நம் சாஸ்திரம் கூறுவது விபூதியை சதா தரித்திருக்க வேண்டும், அதுவும் தண்ணீரினால் குழைத்துத்தான் தரித்திட வேண்டும். பசும் சாணத்தினால் தயாரிக்கப்பட்டதான விபூதி ச்லாக்யம். கோ ரக்ஷணம், லோகரக்ஷணம் என்று சொல்வார்கள். மேலும் விபூதிக்கே தீர்த்தத்தினால் பவித்ரம் ஏற்படுகிறது. விபூதியும் பவித்ரம் அது சாக்ஷாத் மஹாலக்ஷ்மி அம்சம், தீர்த்தம் ஸாக்ஷாத் கங்கை, இரண்டும் சேர்ந்தே இருப்பதால் தான் ஐஸ்வர்யம் என்கிறேன். பசுவின் ப்ருஷ்ட பாகத்தில் வால் பகுதியில் பசுஞ்சாணம் என்பது லக்ஷ்மி (கோமியம்) அடுத்து கோமுத்ரம் தீர்த்த ஸ்வரூபம். விபூதியுடன் கோமுத்ரமான (கங்கைக்கு நிகரான) தீர்த்தத்தையோ அல்லது வீட்டில் உள்ள தீர்த்தங்களில் கங்கை வசிப்பதால் தீர்த்தத்தோடு விபூதியை குழைத்து இட்டு கொள்வது தான் தர்மம்.

அது எந்த காலத்திலும் பொருந்தும். உதயாத் பூர்வம் முதல் சூர்ய அஸ்தமனத்திற்கு முன் விபூதி தாரணம் தீர்த்தத்துடன் குழைத்து தரிப்பது தான் தர்மம். அஸ்தமனத்திற்கு பிறகு நதி தீரத்தில் தீர்த்த ஸ்நானமே கூடாது என்றும் பசு பூஜை அஸ்தமனத்திற்கு பின் பலன் இல்லை என்றும் கூறுகிறார்கள். விபூதி தரிக்கும் போது உண்டான மந்திரங்களை சொல்லி தரிப்பது அதீத பலன் உண்டு. 'காணாமல் கோணாமல் கண்டு கொடு' என்பதை போல் உதயாத் பூர்வம், 5 - 6, 11 - 12 மதியம், மாலை 5 - 6 மணி இக்காலங்களில் விபூதியை ஜலம் கலந்துதான் இட்டுக்கொள்ள வேண்டும். அனுஷ்டான தர்மத்தில் இதுவும் அடங்கும். 'நீரில்லா நெற்றி பாழ்' விபூதி நன்கு குழைத்து இட்டு கொள்வது தான் நம் கலாசாரம். கலாசார தர்மத்தை கடைபிடிப்பது அவசியமானதாகும்.

**94. How do we control and tame the mind?**

To keep our mind clear and pure, we need to uphold the following - clarity in decisions, reading books having clear concepts, clarity in thought process, actions, speech, etc. A state of Yoga or meditation is not required; certain amount of perseverance or determination is enough for attaining clarity. There is a saying “Manamadhu Semmaiyaanal Mandhiram Jabikka Vendam”. Happiness, sorrow, success, failure, growth, downfall, tolerance - one should consider everything with level headed-ness. One should be happy and contented with what one has. We can gain peace of mind through our actions itself. If Love is filled totally in everything we do, the mind can gain peace and can compromise in anything. The mind is the reason or cause for all our worries. If the mind has to be mature, we need to follow the prescribed practices continuously for a long period of time and by practicing this, our mind would become stable. The mind would also become calm.

To ensure that the mind does not get confused, we should avoid giving importance to small things in life. We should live for ourselves and any popularity, money, riches, etc. should come on its own. To follow what is on our mind, our mind should be like a mirror. There are several ways by which we can gain clarity in mind. It is considered great and superior when we are able to develop a clear mind and when we are able to provide clarity to others by having a clear mind.

**மனதை குழப்பம் இல்லாமல் கட்டுப்பாட்டுடன் எப்படி வைக்க**

வேண்டும்?

மனதை தெளிவாக வைத்துக்கொள்ள தெளிவான முடிவுகள் தெளிவான நூல்கள் தெளிவான சிந்தனை, செயல், சொல் ஸகலத்திலும் நாம் தெளிவை கடைபிடிக்க வேண்டும். எந்த யோகநிலையும் வேண்டாம், வைராக்யம் இருக்குமேயானால் ஓரளவு தெளிவு பெற முடியும். மனம் அது செம்மையானால் மந்திரம் ஜபிக்க வேண்டாம். சுகம், துக்கம், வெற்றி, தோல்வி, ஏற்ற இறக்கம், சகிப்புத்தன்மை மேலும் ஸமநிலையோடு அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இருப்பதை வைத்து ஆனந்தமடைய வேண்டும். மன அமைதி நம் செயல்கள் மூலமே கிடைக்கும். அன்பு மட்டும் ஸகலத்திலும் பூரணமாக இருந்துவிட்டால் மனதுக்கு சாந்தியும் சமாதானமும் கிடைத்துவிடும். மனது தான் எல்லா அவஸ்தைக்கும் காரணம். மனது பக்குவப்படவேண்டுமேயானால் பலகாலம் அதற்குண்டான வழிமுறைகளை கடைபிடித்து அதற்குண்டான பயிற்சியின் மூலம் மனம் ஒருநிலைப்படும் மனதிற்கு அமைதி கிடைக்கும். மனதில் குழப்பங்கள் அண்டாமல் இருக்க சிறு சிறு விஷயங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை தவிர்க்க வேண்டும். நாம் நமக்காக வாழ வேண்டும். புகழ், பணம், வசதி தானாக வரட்டும். மனதை நம்மால் புரிந்து நடக்கவும் நம் மனது நமக்கு கைக் கண்ணாடியைப் போல் இருக்கனும். மனம் தெளிவு பெற பல வழிமுறைகள் உண்டு. நம்மையும் தெளிவு படுத்தி மற்றவர்களையும் தெளிவுபடுத்தும்படி நம் மனம் இருப்பது தான் சிறப்பு.

### 95.Why do we break coconuts?

Breaking coconuts is a way (form) of expressing your Bhakthi. Beetel leaves, nuts, fruits and coconuts are all pooja materials. By breaking the coconut, obstacles will be removed. The three bondages of ‘Arrogance, Vengeance and Maya’ would also be removed. Further coconut is something which is obtained from a great height. “Than Unda Neerai Thalayale Than Tarudadal” - similarly the tree with its sacrificing nature, inspite of any kind of water it receives, bestows pure and tasty water and the ‘Ottu’ which is used in Yagnas. Though various kinds of devotees are there, God showers His grace to all His devotees without any partiality. Since it has three eyes it denotes the form of the three-eyed Lord Shiva. As the portion of the coconut with three eyes is considered as Shiva Prasadam, this Prasadam is offered to the devotees. There are also

few people who have the belief that if the coconut breaks into equal portions, then the task would not get obstructed. In some rituals, a portion of the coconut (‘Thengai Mudi’) is used for lighting the ‘Nei Thiri Deepam’. Even while going to Sabarimala, the coconut with ghee filling is taken as the ‘Muthirai Thengai’. As a representative (substitute) of Gho (cow), coconut is used in charity. For wiping away our sins and for fulfillment of our prayers, people use coconuts as ‘Sedaru-kai’. Coconut remains as a primary element in a pooja.

**தேங்காய் உடைப்பதின் காரணம் என்ன?**

தேங்காய் உடைப்பது பக்தியின் வெளிப்பாடு. வெற்றிலை பாக்கு பழம் தேங்காய் என்பது பூஜை பொருட்கள். தேங்காய் உடைப்பதால் விக்னம் நிவர்த்தி ஆகும். ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம், மும்மலங்களை அகற்றுவதாகும். மேலும் தேங்காய் என்பது உயர்ந்த இடத்தில் கிடைப்பது. தான் உண்டநீரை தலையாலே தான் தருதலால் என்பதைப்போல் தியாக மனப்பான்மையிலுள்ள விருக்ஷம் எந்த நீரை பெற்றாலும் சுத்தமான சுவையான நீரையும், பருப்பையும் யாகத்திற்குரியதான ஓட்டையும் கொடுக்கிறது. இறைவன் தன்னிடம் வரும் பக்தர்கள் பலவிதமாக இருந்தாலும் அனுக்ரஹத்தை பாரபட்சம்மின்றி அனைவருக்கும் வழங்குகிறார். மேலும் முக்கண்ணை உடையதால் முக்கண்ணன் ஆன சிவ ஸ்வரூபத்தை குறிக்கிறது. சிவப்ரஸாதமாக மூன்று கண்ணுடைய மூடியை மட்டுமே பக்தர்களுக்கு ப்ரஸாதமாக வழங்குகிறார்கள். தேங்காய் சமமாக உடைந்தால் கார்யம் தடைபடாது என்பது கூட மக்களின் நம்பிக்கை. சில சடங்குகளில் தேங்காய் மூடியில் நெய்திரி தீபம் ஏற்றுகிறார்கள். சபரிமலைக்கு நெய்யை கூட தேங்காயில் அடைத்து முத்திரை தேங்காயாக எடுத்து செல்கிறார்கள். கோ பிரதி நிதியாக தேங்காய் தான பொருள் ஆகிறது. நம்முடைய பாவங்கள் தொலையவும், ப்ராத்தனை நிறைவேறவும் சிதறு காயாக உபயோகிக்கிறார்கள். தேங்காய் பூஜையில் முதன்மையாக அங்கம் வகிக்கிறது.

**96. What is the significance of giving Bhooktha Dakshanai and Thengai to Ritviks after Veda Sadas?**

In general, there are certain types of procedures which are followed in our society for many generations. In certain functions, there are many kinds of Thamboolam which are given. For example, Thamboolam is given after the Muhurtham time in a marriage to the

relatives in a function and Beeja Daanam, Nel and 1 Rupee coin is given in Punyaha Vachanam to those who attend the function. These kind of procedures are followed for ages together.

Further as per the Shastras also, Brahmins should not be sent empty handed after their meal and one should offer atleast some Sambavanai to them. Just like giving Anugnai, giving Bhooktha Dakshanai is also important and essential. They should not be sent after a meal without giving them anything and this is a reference as per the Shastras. This may not be followed in few places but is followed in majority of the places. We should also follow this, as this is considered as a Dharma for the society.

**வேத சதஸ்ஸின் போது வைதீகாளுக்கு புக்த தக்ஷிணை மற்றும் தேங்காய் அளிப்பதன் பயன் என்ன?**

பொதுவாக நம் சமூகத்தில் ஒருவித ஸம்பரதாயங்கள் வழி வழியாக கடைபிடித்து வந்துள்ளார்கள். ஒரு சில சுப காரியங்களுக்கு பல தாம்பூலம் என்று உண்டு. உறவினர்களுக்கு தாம்பூலம் கொடுப்பது முகூர்த்தம் முடிந்ததும் கொடுப்பது, புண்யாஹவாசனத்தில் வந்தவர்களுக்கு பீஜதானம் (விரதானம்) நெல் மற்றும் அதனுடன் ஒரு ரூபாய் காயின் மட்டும் கொடுப்பது இம்மாதிரியான ஸம்ப்ரதாயம் தொன்று தொட்டு வருகிறது. மேலும் சாஸ்த்ரத்திலும் ப்ராமணர்களை சாப்பாட்டுக்கு பிறகு வெறுமனே அனுப்பாமல் முடிந்ததை அவர்களுக்கு சம்பாவனையாக கொடுக்கனும் என்பது சாஸ்த்திரம். அனுக்ஞை என்பதைப் போல் புக்த தக்ஷிணையும் கொடுப்பது அவசியமானது. சாப்பாடு போட்டு சும்மா அவர்களை அனுப்பக்கூடாது என்பதற்கு சாஸ்த்திர ப்ரமாணம் உள்ளது. இதை சில ஜில்லாவில் கடைபிடிப்பது இல்லை அனேக இடங்களில் கடைபிடிக்கப்படுகிறது. நாமும் கடைபிடிப்பது சமூக தர்மம் ஆகும்.

**97. What are the methods of Sarva Prayachittam? Can you also explain about “Krushram”?**

Though there are many things which are mentioned for Sarva Prayachittam, our daily Karmanushtam of ‘Sandhya Vandanam’ is the Prayachittam. It is enough if this is followed strictly 3 times a day.

There is no Prayachittam than this. If the Gayathri mantra is chanted daily 1000 times (with sincerity and involvement), that itself will bestow great prosperity. If self-control or self-discipline is followed, that itself is the best Prayachittam much more than adherance to all our karmas or Samskaras. Self-control or self-discipline can be adhered to by self-enquiry and without any worldly enquiry. Further even service to God is Sarva Prayachittam. Strict observance of the following - Devotion towards one's Mother, Father, Acharya (Guru) and Atithi (Guest) is also Sarva Prayachittam. What has been explained above is My personal or individual opinion.

The practice of Krushram or Krishram is there. Krushram is done as a remedy. For all kinds of events (Poorvam and Aparam), it is done for removing the Graha Dosha. In all events, Dakshinai is given for Graha Preethi (Navagraha and Panchanga Preethi) and for removing Lagna Dosha and this is as per the Shastra.For all kinds of karma, Dakshinai is given as a Poorva Karyam. For attaining Atma Shuddhi, the Brahmanas are given 'Yel Urundai' along with the Tamboolam at the time of Srardham and this is called as Krushram. Giving Oil, Shikakai and 'Yel Urundai' along with the Tamboolam is called as Krushram. For worshipping the forefathers and at the time of Srardham what is given to the Brahmanas before their 'Snanam' is referred as Krushram.

**ஸர்வ ப்ராயசித்தத்தின் முறை என்ன? க்ருஷ்ரம் என்றால் என்ன?**

ஸர்வ ப்ராயசித்தத்திற்கு வேண்டி அனேகம் கூறியிருந்தாலும் நமக்கு நித்ய கர்மானஉஷ்டமான ஸந்த்யா வந்தனம் தான் ப்ராயசித்தம். அதை மூன்று காலங்களிலும் அனுசரித்து வந்தாலே போதுமானது. அதை விட ப்ராயச்சித்தம் எதுவும் இல்லை. அச்ரத்தை இன்றி நித்ய காயத்ரி ஆயிரம் ஜெபம் செய்து வந்தாலே பரம சௌக்யம். நாம் சுயகட்டுப்பாட்டை அனுசரிப்பதே எல்லா கர்மாவையும் ஸம்ஸ்காரங்களையும் விட மிக மிக சிறப்பான ப்ராயசித்தமாகும். லோக விசாரமின்றி ஆத்ம விசாரம் மூலமே நம்மால் சுயக்கட்டுப்பாட்டை அனுஷ்டிக்க முடியும். மேலும் பகவத் கைங்கர்யம் கூட ஸர்வ ப்ராயச்சித்தம் ஆகும். இருப்பினும் மாத்ரு பக்தி, பித்ரு பக்தி, ஆசார்ய பக்தி, அதிதி பக்தி இவற்றையும் சரிவர கடைபிடிப்பதே ஸர்வ ப்ராயசித்தம். இது என் தனிப்பட்ட கருத்தாகும்.

கிருச்ரம், க்ருஉஷ்ரம் என்ற வழக்கம் உள்ளது. க்ருஉஷ்ரம் என்பது ப்ராயசித்தார்த்தமாக செய்வது. பூர்வ அபரமான சகல கார்யங்களுக்கும் கிரஹதோஉஷ நிவர்த்திக்காக செய்ய வேண்டியது. காலதீதமானதாக ஸகல கார்யங்களிலும் கிரஹப்ரீதிகரமான நவகிரஹ மற்றும் பஞ்சாங்க ப்ரீதிகரமாகவும், லக்ன தோஉஷம் நிவர்த்திக்காக தக்ஷிணை அளிப்பது (கொடுப்பது) சாஸ்த்திரம். கர்ம சாத்குன்யமான எல்லா விதமாக கர்மாக்களுக்கும் பூர்வ கார்யமாக தக்ஷிணை அளிப்பதாகும்.

க்ருஉஷ்ரம் என்பது ச்ரார்தாதி கார்யங்களில் ப்ராம்மணர்களுக்கு ஆத்ம ஸௌத்திக்காக தாம்பூலத்துடன் எள் உருண்டை கொடுப்பது. எண்ணெய், சீயக்காய், தாம்பூலம் உடன் எள் உருண்டை ப்ராம்மணாளுக்கு கொடுப்பது க்ருஉஷ்ரமாகும். பித்ரு பூஜனத்திற்க்கு ஸ்ரார்தத்திற்கு ஸ்நானம் வரிக்கக் கூடிய ப்ராம்மணாளுக்கு ஸ்நானம் செய்வதற்கு முன் கொடுக்கக் கூடியது க்ருஉஷ்ரம் ஆகும்.

### 98. What is the significance of Veda Parayanam in the months of Karthigai & Margazhi?

‘Krithika Mandala Parayanam’ refers to the months of Karthigai and Margazhi i.e. it is held in these two months. Generally one mandalam can be anything between 40 to 48 days. Doing Veda Parayanam in the house will bring prosperity. Further Vedas denote the month of Karthigai. Three Pakshas, 45 days, i.e. since Krithigai is the first Nakshaktra, doing the Parayanam starting on the day of Karthigai upto 45 days is known as ‘Krithiga Mandala Parayanam’. This is followed as per the Lunar calendar in the month of Karthigai. In the Sarath kaalam (autumn season), Vedas are offered to the Veda Matha through Parayanam, which bestows several benefits. Further in the month of Karthigai, many poisonous creatures keep moving around. This poison has great power and is dangerous. For the purpose of safeguarding ourselves from the danger of these poisonous creatures and/or any kind of problems from insects, Parayanam of 44 Prashanam is required. If we are unable to complete it as planned, it would be convenient to complete it in the month of Margazhi. When Veda Parayanam is conducted in each and every house, the people residing in the house will be protected from the danger of these poisonous creatures. The sound of Veda

mantras would act as a “Rakshai”. One can gain great prosperity by following Krithika Parayanam.

**வேத பாராயணம் கார்த்திகை மற்றும் மார்கழி மாதத்தில் நடைபெற்றால் அதன் மஹிமை என்ன?**

கிருத்திகா மண்டல பாராயணம் என்பது கார்த்திகை மாதம், மார்கழி மாதம். இரு மாதங்களில் செய்யப்படுவது. ஒரு மண்டலம் என்பது 40 முதல் 48 வரை கூறலாம். வேத பாராயணம் ஒவ்வொரு வீடுகளில் செய்வது ச்ரேயஸ்ஸை தரும். மேலும் வேதம் கார்த்திகையை குறிப்பிடுகிறார்கள். மூன்று பக்ஷமாக 45 நாட்கள், அதாவது கிருத்திகை முதல் நக்ஷத்திரம் ஆனபடியால் கார்த்திகை முதல் நாள் அன்று ஆரம்பித்து 45 நாட்கள் செய்யும் இந்த பாராயணம் கிருத்திகா மண்டல பாராயணமாகும். கார்த்திக மாசமான சாந்த்ரமானரிதியாகவும் இதை அனுஷ்டிக்கப்படுகிறது. சரத் காலமானபடியால் வேதங்களினால் வேத மாதாவிற்கு செய்யும் பாராயணம் பண்மடங்கு பலன் உண்டு. மேலும் கார்த்திகை மாதம் விஷ ஜந்துக்கள் அதிகமாக நடமாடும். அதன் விஷம் வீர்யம் உண்டு. விஷ ஜந்துக்கள் மூலம் ஏற்படக்கூடிய உபாதைகளிலிருந்து விடுபடவும் பூச்சுகளினால் தொந்தரவு இல்லாமல் இருக்கவும் 44 ப்ரச்னம் பாராயணம் பண்ணாலும். நாள் கணிதப்படி முடிக்க முடியாத பக்ஷத்தில் மார்கழியில் முடிக்க சௌகர்யமாயிருக்கும். வேத சப்தங்கள் ஒவ்வொரு வீடுதோறும் பாராயணம் செய்யும் போது அங்குள்ளவர்களுக்கு விஷப்பிராணிகளால் தீங்கு வராது. இந்த வேத சப்தங்கள் ரக்ஷையாகயிருக்கும். கிருத்திகா பாராயணம் அவசியம், அனுஷ்டித்து பரம ச்ரேயஸ்ஸை அடைய முடியும்.

**99. Can you explain about Bhakti Margam, Yoga Margam and Gnana Margam.**

When we are involved in worshipping God whereby it leads us in the right path and in leading a proper life, it is referred as ‘Bhakti Margam’. One can follow the Bhakti Marga by rendering service, group prayers, contemplating on God and by developing good qualities. Bhakti Margam refers to the path of devotion. We can make ourselves pure and our mind/heart pure. The service we render to God and His followers refer to ‘Bhakti Margam’.

Yoga Margam refers to the path whereby you gain material things and all kinds of comforts. For gaining comforts for our family and for

ourselves considering the requirements, for accumulating/saving material things for our descendants and having the desire to enjoy life with material things, when we pray to God this constitutes Yoga Margam. Another aspect is 'Atma Dhyanam' by which you do not have any attachment and you meditate on God – this is also referred as Yoga Margam.

Gnana Margam is the path where you have great faith in a Sadhguru and follow His Upadesha. Through this you can remove the darkness of ignorance and gain the light of 'Wisdom' and attain Moksha through 'Atma Vicharam'. The Paramatma (which is the 'Para-Brahma') is what is real/true and understanding or realizing this is the path of wisdom or 'Gnana Margam'.

Serving God, after that gaining the merits and after that considering everything as God and giving everything back to Him at the end – this is referred as Bhakti, Yoga and Gnanam Margam.

**பக்தி மார்கம், யோக மார்கம், ஞான மார்கம், இவற்றின் விளக்கம் தேவை?**

பக்தி மார்கம், இறை வழிபாட்டில் ஈடுபாடு இவை நம்மை நல்வழி மூலம் செம்மையாக்கிக் கொள்வது, தொண்டின் மூலம் கூட்டு வழிபாட்டின் மூலம் இறைவனை பற்றி ஸ்தோத்திரம் செய்வதின் மூலம், நல்ல குணங்களின் மூலம், பக்தி மார்கத்தில் இருக்க முடியும். பக்தி மார்கம் என்பது பக்திக்குண்டான வழியாகும். நம்மை, நம் மனதை தூய்மையாக்கி கொள்ள முடியும். நாம் இறைவனுக்கும் அடியார்களுக்கும் செய்யும் தொண்டே பக்தி மார்கம் ஆகும்.

யோக மார்கம் என்பது பொருள் அடையவும், சகல சுகபோகங்களுடன் வாழ்வதும் 16 பேறுகளுடன் வாழ்வது. நமக்கும் நம் குடும்பத்திற்கும் உண்டான சௌகர்யங்களை அடைய வேண்டி வாழக்கையின் மேன்மையை கருதி இறைவனிடம் ப்ரார்தித்து அடைய பொருள்களை நம் சந்ததிகளுக்கும் சேமித்து வைத்துவிட்டு, பொருள் கொண்டு வாழ ஆசைப்படுவது யோக மார்கம். இன்னொன்று ஆத்ம த்யானம் மூலம் எந்த பற்றும் இல்லாமல், ஈஸ்வர தியானத்தில் இருப்பதும் யோக மார்கம் தான்.

ஞான மார்கம் என்பது சத்குருவை பிடித்துக்கொண்டு அவருடைய

உபதேசங்களை கேட்டு நடப்பது, அதனால் அக்ஞானம் என்ற இருளை அகற்றி ஞானம் என்ற ஒளியை பெற்று ஆத்ம விசார யோகத்தின்படி மோக்ஷத்தினை தெரிந்து கொள்வது. உபதேசங்களை படிப்பதோ, கேட்பதோ, மனதை தெளிவு படுத்திக்கொள்வதோ, எல்லாம் மாயை தான். பரமாத்மாவாகிய பரம்பிரும்மாதான் நிஜம் என்பதை உணர்ந்து தெரிந்து கொள்வது ஞான மார்கம் ஆகும்.

இறைவனின் சேவை, பிறகு பலன், பிறகு அனைத்தையும் இறைவனாக பாவித்து அவனிடமே சேர்ப்பிப்பது, இது தான் பக்தி, யோக, ஞான மார்கம்.

**100. What is Sanathana Dharma? I have read and also heard learned people say that Hinduism is not a religion, but a way of life. Can you please explain this.**

Sanathana Dharma is ‘Vaideega Dharma’. Living as per Manu Dharma Shastram alone is Sanathana Dharma. That which is followed to keep the heart/mind within control; following non-violence; having synchronization of mind and speech (i.e. Sathya Vaaku – Speaker of Truth); knowing that robbery is bad and not stealing anything i.e. observing ‘Asteya’ (avoidance of stealing / non-stealing); performing actions (which bring merit) like Theertha Yatra for purifying the physical body; keeping the organs pure; following the Purusharthas ‘Dharma-Artha-Kama-Moksha’ – these constitute Sanathana Dharma. Understanding the tenets of a religion, following the Upadesha of religious leaders, following the procedures as per our religion, etc. and related Dharmas are referred as Sanathana Dharma. Sanathana Dharma is that which is followed based on learning from books and from a Guru. Hence in this Kali Yuga, the Hindu religion of Sanathana Dharma i.e. Vaideega Dharma should be followed. Even our descendants can lead a good life only by following Sanathana Dharma. When we follow (adhere) this, it would be convenient for our descendants to continue the same. Following the Samskaras is Sanathana Dharma. Each and every one of us is bound by ‘Karma’. Following Pitru-yagnam, Deiva-yagnam, Bhootha-yagnam, Manushya-yagnam, Brahma-yagnam, etc. is the Dharma laid down for man. Although there are several crores of living beings created by God, Dharma is laid down only for a human being. Only through ‘Karma’ can we attain the status of ‘no rebirth’. Further one who has sympathy for others (when they have problems) and one who leads a life as per Manusmrithi (which is

prescribed for man) is respected as a 'Hindu'. Since they follow certain 'Lakshanas' they are called as 'Hindus'. Earlier our religion did not have any name. 'Sanathana Dharma', 'Sanathana religion', etc. were also names which were given by some people in a short-time; it is not known. Someone has kept the name as 'Hindu' for this religion. Our people 'Hindus' (i.e. Sindhus) lived in the banks of Sindhu. Other country people started calling 'Sindhus' as 'Hindus'. Further religion is a system which makes us realize and understand the purpose of our birth. The tool or system utilized for gaining 'Shreyas' is Religion. This is referred as 'Dharma' in a book.

**ஸனாதன தர்மம் என்றால் என்ன? நம் இந்து மதம் ஒரு மதம் அல்ல வாழ்க்கை முறை என்கிறார்கள். இதற்கு உங்கள் விளக்கம் தேவை.**

ஸனதான தர்மம் என்பது நம் வைதீக தர்மம் ஆகும். மனுசாஸ்திரத்தின் படி வாழ்வது மட்டுமே ஸனாதான தர்மம் ஆகும். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அனுஷ்டிக்கப்படுவது அஹிம்சை வழியில் நடப்பது சத்தியதின் படி மனதும் வாக்கும் ஒரே விஷயத்தில் இருப்பது சத்தியவாக்காக இருப்பது அஸ்தேயம் எனப்படும் திருடுவது தவறு என்று புரிந்து திருட்டை செய்யாதிருப்பது சரீர சுத்திக்காக தீர்த்த யாத்திரை போன்ற புண்ணிய காரியம் இந்திரியங்களை பவித்திரமாக வைத்துக்கொள்ளுதல் தர்மார்த்த காம மோக்ஷமான புருஷார்தங்களை அனுஷ்டிப்பது இவைகள் தான் ஸனாதான தர்மம் ஆகும். மதங்களின் கோட்பாடுகளை புரிந்து கொண்டு மத ஆச்சாரியார்களின் உபதேசத்தின் படி நடந்து கொள்வது நம் மத ஸம்பிர்தாயங்களை அனுஷ்டிப்பது போன்ற பலவகையான தர்மங்களே ஸனாதான தர்மமாகும். ஸனாதான தர்மம் நூல் வாயிலாக தெரிந்து கொண்டோ அல்லது குரு மூலம் தெரிந்து கொண்டே வாழ்வதற்க்கு தான். ஆகவே நம் இந்து மதமான ஸனாதான தர்மமான வைதீக தர்மமே கலியுகத்தில் நாம் அனுஷ்டிக்கப்படுவது. நம் சந்ததிகள் கூட ஸனாதான தர்மத்தின் அடிப்படையில் தான் வாழ முடியும். நாம் கடைபிடித்து (அனுஷ்டித்து) வாழும்போது பின்பற்றுவதற்கு சந்ததிகளுக்கு சௌகர்யமாய் இருக்கும் சம்ஸ்காரணங்களை அனுஷ்டிப்பது தான் ஸனாதான தர்மம் ஆகும். ஒவ்வொருவரும் கர்மாவிற்கு கட்டுபட்டவர்கள். பித்ரு யஞ்னம் தேவ யஞ்னம் பூத யஞ்னம் மனுஷ யஞ்னம் பிரம்ம யஞ்னம் போன்றவற்றை அனுஷ்டிப்பதுதான் மனித தர்மம். மேலும் பலகோடி ஜீவன்கள் பகவத் சிருஷ்டியில் இருந்தாலும் மனிதனுக்கு

மட்டுமே தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறது. கர்மாவினால் தான் பிறவியில்லா பெருவாழ்வை அடைய முடியும். மேலும் மற்றவர்களின் சிரமத்தை கண்டு வருத்தப்படுபவனும் மனிதனுக்கு விதிக்கப்பட்ட மனு ஸ்ம்ருதி படி வாழ்பவனும் இந்துவாக மதிக்கப்படுகிறான். சில லட்சணங்களை கடைபிடிப்பதால் இந்து என்று அழைக்கிறோம். வாஸ்துவமாக நமது மதத்திற்கு ஒரு பெயரும் இல்லை ஸனாதான தர்மம் ஸனதான மதம் என்று கூட குறுகிய காலத்தில் யாரோ பெயர் சூட்டி இருக்கிறார்கள் தெரியவில்லை.

இந்து மதம் என்று யாரோ பெயர் வைத்திருக்கிறார்கள் நம்மவர்கள் ஹிந்து (சிந்து) கரையில் இருந்தார்கள் மற்ற தேசத்தவர்கள் சிந்து என்பதை ஹிந்து என்று சொன்னார்கள். மேலும் மதம் என்பது ஜென்மம் எடுத்ததின் பிரயோஜனத்தை அடைய சொல்லி கொடுக்கும் ஒரு வழி. ச்ரேயஸ்க்கு எது சாதனமோ அது தான் மதம். அதை புஸ்தகத்தில் தர்மம் என்று கூறுகிறார்கள்.


ஜெய் குரு தேவ்

******

Printed by: Classica Design and Printing Ph: 044-42040404, 42020505



# குரு பாத தரிசனம் - பாப விமோசனம்



ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா ஸங்க்,
ப.எண் 15, பு.எண் 13, 24வது தெரு, நங்கநல்லூர்,
சென்னை - 600 061, இந்தியா